
# உலக அமைதிக்கு வித்திட்ட

# லியோ டால்ஸ்டாயும் வேதாத்திரி மகரிஷியும்





அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

## இதனுள்ளே


1. லியோ  டால்ஸ்டாய் வேதாத்திரி மகரிஷி ஒரு பார்வை
2. டால்ஸ்டாயின் அன்னகரீனினா நாவலும் வேதாத்திரியமும்
3. பெண்கள் உயர்வில் முரண்படும் டால்ஸ்டாயும் மகரிஷியும்
4. படைப்பாளிகள்
5. டால்ஸ்டாயின் போரும் அமைதியும் – வேதாத்திரியத்தின் உலக சமாதானமும்
6. Vethathirian Principles for the world
7. டால்ஸ்டாய் பொன்மொழிகள்
8. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள்
9. நான் யார் ? உன்னை அறிந்து கொள்ள
10. மதங்களின் மூட நம்பிக்கைகள்
11. தத்துவ சிந்தனைகள்
12. டால்ஸ்டாய் நிறுவிய தத்துவக் கோட்பாடுகளில் சில
13. வாழ்க்கையும் மரணமும்

அறிவின் முழுமையை நோக்கிய பயணத்தில் மனிதகுலம் சென்று கொண்டிருக்கிறது.

இந்தப் பயணத்தை ஊக்கப்படுத்துவதற்காக ஆங்காங்கே உலகின் பல பகுதிகளிலும் அந்ததக் காலக் கட்டத்தில் சிந்தனையாளர்கள் வந்தார்கள். வருகிறார்கள். வருவார்கள் என்னும் சுவாமி விவேகானந்தரின் கொள்கைக்கேற்ப, மானுடத்தை வழி நடத்தி செல்ல ரஷ்யாவில் லியோ டால்ஸ்டாயும் இந்தியாவின் தென் தமிழகத்தில் அருள்தந்தை வேதாத்திரி மகரிஷியும் வந்தார்கள்

டால்ஸ்டாய் லெவ் நிகோலாவிச் (1828 – 1910) ரஷ்ய எழுத்தாளர், சிந்தனையாளர்.

வேதாத்திரி மகரிஷி (1911–2006) தென்னிந்திய சிந்தனையாளர். தத்துவஞானி.

ரஷியாவின் புகழ்பெற்ற எழுத்தாளரும், நாவலாசிரியருமான லியோ டால்ஸ்டாய், உலக அமைதிக்கும் உலக மக்களின் ஒற்றுமைக்கும் அயராது பாடுபட்ட மாமனிதர்.

அவரது 'போர் மற்றும் அமைதி' மற்றும் 'அன்னகரீனினா' நாவல்கள் மூலம் உலக அமைதியை வலியுறுத்தினார்.

வேதாத்திரி மகரிஷி உலக அமைதிக்கும் உலக மக்களின் ஒற்றுமைக்கும் அயராது பாடுபட்ட மாமமனிதர். அவரது ''ஞானக்களஞ்சியம்'' மற்றும் ''உலக சமாதானம்'' மூலம் உலக அமைதியை வலியுறுத்தினார்.

டால்ஸ்டாய், திருவள்ளுவரை உயர்வாக மதித்தார். திருக்குறளின் வாய்மை, இன்னாசெய்யாமை அதிகாரங்கள் அவரை மிகவும் கவர்ந்தவை என்று குறிப்பிடுவார்.

நமது தேசத்தந்தை மகாத்மாகாந்தி அவரை தனது வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டார்.

வேதாத்திரி மகரிஷியின் இலக்கியங்களும் தத்துவங்களும் திருக்குறளோடு ஒத்திருக்கும் வகையில் அமைந்துள்ளன.

திருக்குறளின் உட்பொருள் விளக்கம்'' என்ற புத்தகத்தை வேதாத்திரி மகரிஷி மானுடத்திற்குத் தந்துள்ளார்.

ரஷியாவில் உள்ள ஒரு சிறிய ஊரில் 1828–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 28–ந்தேதி டால்ஸ்டாய் பிறந்தார்.

தென்னிந்தியாவில் தமிழகத்தில் கூடுவான்சேரி என்ற சிறிய கிராமத்தில் 1911 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 14 நாம் நாள் பிறந்தார் வேதாத்திரி.

டால்ஸ்டாய், பள்ளிப் படிப்பை முடித்தவுடன் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து வரலாறும், ஜெர்மன் மொழியும் எடுத்துப்படித்தார்.

ஆனால் அதில் அவர் தேர்ச்சி பெறவில்லை. பிறகு சட்டக்கல்வியை பயின்றார். அதன்பிறகு சில காலம் விவசாயத்தில் ஈடுபட்டார்.

வேதாத்திரி மகரிஷி திண்ணைப் பள்ளிக்கூடத்தில் மூன்றாம் வகுப்பு வரைதான் படித்தார்.

டால்ஸ்டாய், இளமைக்காலங்களில் சில வருடங்கள் கட்டுப்பாடில்லாமல் மனம் போனபடி தவறான செய்கையில் ஈடுபட்டார்.

அதன் காரணமாக வியாதியால் அவதிப்பட்டார். எந்தவித பொறுப்புகளும் இல்லாமல் சோம்பேறித்தனமாக சுற்றித்திரியாமல் ராணுவத்தில் சேர்ந்தார்.

வேதாத்திரி மகரிஷியோ சிறு வயதிலேயே கடவுளைத் தேடும் பயணத்தில் பயணித்தார். பல குருமார்கள் அவருக்கு வழிகாட்டிகளாய் வந்தனர்.

டால்ஸ்டாய், தாய் மொழியான ரஷிய மொழியுடன் ஆங்கிலம், லத்தீன், ஜெர்மனி, பிரெஞ்சு, ஆகிய மொழிகளைக் கற்றுத்தேர்ந்தார்.

வேதாத்திரி மகரிஷி தனது காலை உணவைத் துறந்து அதில் வந்த வருமானத்தில் ஒரு ஆசிரியரிடம் ஆங்கிலம் பயின்றார்.

டால்ஸ்டாய்க்கு அவருடைய 18–வது வயதிலேயே தத்துவ ஞானம் பற்றி கட்டுரை எழுதும் அளவுக்கு அறிவு இருந்தது. ஒரு நாள் கூட இரவில் படிக்காமல் இருக்கமாட்டார்.

படிக்கும் போது அறையை அடைத்துவிடுவார். மனைவி, குழந்தைகள், நெருங்கிய நண்பர்கள் உள்பட யாரையும் உள்ளே வர அனுமதிக்கமாட்டார்.

நாள்தோறும் பல்வேறு அறிஞர்கள் எழுதிய புத்தகங்களை படிப்பார். இந்தப் பழக்கம் அவரது இறுதி நாள் வரை இருந்தது.

சிறு வயதிலேயே வேதாத்திரி மகரிஷி கைகள் தறியில் ஈடுபட்டிருந்தாலும் மனம் முழவதும் இறையுணர்வு பெறுவதைப் பற்றியே சிந்தித்ததுக் கொண்டிருந்தது.

டால்ஸ்டாய் வேதாத்திரி மகரிஷி இருவரது எழுத்துக்கள் மதம், அரசாங்கம், பொருளாதாரம், சமூக அமைப்பு. ஒழுக்கம் முதலிய பல விஷயங்களையும் பற்றியவை.

இவைகளில் ரஷ்ய மேதையான டால்ஸ்டாயின் ஆணித்தாரமான அபிப்பிராயங்களைக் மகரிஷியின் தத்துவங்களையும் காணலாம்.

இவர்கள் எழுதிய கட்டுரைகளும், கடிதங்களும், ஆராய்ச்சிகளும் இன்பமயம். பண்பட்ட இவர்களுடைய உள்ளத்திலிருந்து ஒரே வெள்ளமாகப் பெருகிக் கொண்டிருந்த கருத்துக்களும் பற்பல எழுத்தோவியங்களாக அமைந்திருக்கின்றன.

தன்னுடைய 82–வது வயதில் டால்ஸ்டாய் ஒருநாள் நள்ளிரவில் வீட்டை விட்டு வெளியேறினார். தன் மகளிடம் மட்டுமே சொல்லிவிட்டு சென்றார். மனைவிக்கு அவர் ஒரு கடிதம் எழுதி வைத்து இருந்தார். அதில் ‘கடந்த 48 ஆண்டுகளாக நீ என்னுடன் நட்பாக இருந்து இல்லறம் நடத்தியதற்காக உனக்கு என்னுடைய நன்றி’ என்று எழுதப்பட்டு இருந்தது..

வேதாத்திரி மகரிஷியோ தனது 35 வயதில் தனது மனைவியிடம் விடைபெற்றுக் கொண்டு தன்னை முழுவதும் உலக சமுதாயத்திற்காக அர்ப்பணித்தார். ஞானப்பாதையில் பயணித்தார்.

டால்ஸ்டாய் தனது படைப்புகளில் சொன்னதெல்லாம் ''டால்டாயிசம்'' என்றும் வேதாத்திரி மகரிஷி சொன்னது எழுதியது பாடியது எல்லாம் ''வேதாத்திரியம்'' என்று மானுடத்தால் போற்றப்பட்டு வருகிறது.

உலகில் மனித குலம் சிறப்பாக வாழ, உண்மை நிலை உணர்ந்து உயர்வான வாழ்க்கை நெறிமுறைகளைக் கண்டு அனுபவித்து, அதன் வழி வாழ்ந்து மற்றவரும் சிறப்பாக, அமைதியோடு வாழ வழிகாட்டிய அறிஞர்கள், தத்துவ மேதைகள், விஞ்ஞானிகள், மெய்ஞானிகள் அனைவரையும் நினைவு கூர்ந்து, வாழ்வியல் சிந்தனைகள், செயல் திட்டங்களை, மனித குலம் எளிமையாக புரிந்து கொண்டு, உணர்ந்து வாழ அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி எனும் வள்ளல் அருளிய அரிய கொடைதான் .''வேதாத்திரியம்''.

இந்தப் பிரபஞ்சத்தைப் பற்றியும் மனித வாழ்க்கையைப் பற்றியும் தவநிலையில் தான் பெற்ற கருத்துக்களைப் பல கவிதைகளாகவும் கட்டுரைகளாகவும் புத்தக வடிவங்களில் இந்த உலகுக்கு மகரிஷி அளித்துள்ளார்கள்.

இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் கலந்த தமிழ்ப்பாடல்களை இயற்றியிருக்கிறார்.

பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் எளிய தமிழில் தனது தத்துவங்களை எடுத்துரைத்தார். எல்லா மதங்களின் சாரம் ஒன்றே என்பதை மகரிஷி அவர்கள் வலியுறுத்துகிறார்.

1957ல் மகரிஷி 'உலக சமாதானம்' என்னும் நூல் ஒன்றை வெளியிட்டார்.

தொடர்ந்து பல்வேறு நாடுகளுக்குச் செல்லும் வாய்ப்பு இவருக்குக் கிட்ட அங்கெல்லாம் ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

மனிதகுலம் அமைதியாக வாழ ஏற்ற கருத்துகளையும் சாதனை முறைகளையும் உலகமெங்கும் பரப்பிட 1958–ஆம் ஆண்டில் வேதாத்திரி மகரிஷி அவர்கள் நிறுவியதுதான் உலக சமுதாய சேவா சங்கம்.

வேதாத்திரி மகரிஷி சுமார் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட கவிதைகள் ஞானக்களஞ்சியமாக உலகில் உலா வந்து கொண்டிருக்கின்றன.

80க்கும் மேற்பட்ட உரைநடை நூல்களையும் மானுடத்திற்கு தந்துள்ளார் மகரிஷி..

உலகெங்கும் உள்ள அறிவுத்திருக்கோயில்களிலும், மனவளக்கலை மன்றங்களிலும் ஏன் சுமார் 30 க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களில் வேதாத்திரியம் பாடத்திட்டமாகப் போதிக்கப்பட்டு வருகிறது.

தற்போது இணையம் வழியாக ஆன்லைன் வகுப்புகளிலும் வேதாத்திரியம் பயிற்றுவிக்கப்படுகிறது. ( vethathiriam for World Peace - YouTube · SKY Yoga TV)

இன்று இந்தியாவிலும், சிங்கப்பூர், மலேசியா, ஜப்பான், தென்கொரியா, அமெரிக்கா போன்ற நாடுகளிலும் பல கிளைகளைக் கொண்டு இயங்கி வருகிறது.

வேதாத்திரி மகரிஷி ஏறக்குறைய தமிழிலும் ஆங்கிலத்திலும் சேர்த்து எண்பது நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் சில:

1. வேதாத்திரியத்தின் இறைநிலை விளக்கம்
2. வாழ்வியல் விழுமியங்கள்
3. பிரம்மஞான சாரம்
4. நான் யார் ?
5. ஞானக்களஞ்சியம்

கொங்கு நாட்டில் பொள்ளாச்சி நகருக்கு அருகே வால்பாறை மலையோரத்தில் ஆழியாறு நீர்த்தேக்கம் அமைந்துள்ள இடத்தில் அருட்பெருஞ்ஜோதி நகர் எனும் நகரம் வேதாத்திரி மகரிஷியால் 1984 கால கட்டத்தில் அமைக்கப்பட்டது.



வறுமையிலேயே வாழ அடியெடுத்து வைத்த வேதாத்திரி மகரிஷியின் உள்ளத்தில் வறுமை என்றால் என்ன ? கடவுள் என்பது எது ? அதை ஏன் காண முடியவில்லை ? மனித வாழ்க்கையிலேயே ஏன் துன்பங்கள் தோன்றுகின்றன போன்ற கேள்விகள் அவ்வப்போது ஒலித்துக் கொண்டே இருந்தன.

இவற்றிற்கு காரணங்கள் கண்டு தெளிவு பெறுவதற்காக ஆராய்ச்சியிலும் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார்.

விளைவாக தனது 35வது வயதில் தன்னிலை விளக்கமாக இறைநிலையை உணர்ந்தார்.

அதன் அடிப்படையில் உலக மக்களுக்காக அவர் அளித்த வாழ்க்கை நெறியே மனவளக்கலை ஆகும்.

46 ஆம் அகவையில் உலக அமைதிக்காக 'உலக சமாதானம்' றுடிசடன யீநயஉந என்ற 200 பாடல்கள் நூலை எழுதி 1957ல் வெளியிட்டார்.

இந்த இருமொழிகள் (தமிழ், ஆங்கிலம்) நூலை பாடத்திட்ட வழி பள்ளி, கல்லூரிகளில் பரப்ப வாழ்நாள் இறுதிவரை உழைத்து வெற்றி பெற்றார். இன்று பல பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பு, மேல்பட்டப்படிப்பு, ஆராய்ச்சிப்படிப்பில் பலர் ஈடுபட்டு வருகின்றனர்

டால்ஸ்டாய் 'அன்னகரீனினா' என்ற புகழ்பெற்ற நாவலை எழுதினார்.

அந்தக்கதை அவரது வாழ்க்கையோடு ஏன் மனித வாழ்க்கையோடு ஒத்துப் போனது. வேதாத்திரி மகரிஷி ஞானக் களஞ்சியத்திலும் மனித வாழ்க்கைக்கான பாடல்களை எழுதி வெளியிட்டார்.

தனது அனுபவங்களையும் தான் உணர்ந்ததையும் அறிந்ததையும் ஒன்று விடாமல் ''எனது வாழ்க்கை விளக்கம்'' ''ஞானக்களஞ்சியம்'' போன்ற படைப்புகளில் மானுடத்திற்கு வழங்கிய மகான் வேதாத்திரியே.

டால்ஸ்டாய் 1910–ம் ஆண்டு நவம்பர் மாதம் 20–ந்தேதி தன்னுடைய 82–வது வயதில் மரணமடைந்தார்.

வேதாத்திரி அவர்கள் தனது 95வது வயதில் மார்ச் 28, 2006 செவ்வாய்க்கிழமையன்று மறைந்தார்.

## டால்ஸ்டாயின் அன்னகரீனினா நாவலும் வேதாத்திரியமும்

அன்னா கரீனினா ஒரு நாவல் மட்டுமல்ல. இது ஒரு காவியம். "அன்னா கரீனினா" இந்த பெயரை இனி உச்சரிக்கும்போதே மனதில் தோன்றும் கலவையான உணர்வை எப்படி வெளிப்படுத்துவது அன்னா கரீனாவில் கொஞ்சமாவது கரைந்தால் மட்டுமே உணர முடியும்.

லியோ டால்ஸ்டாய் எழுதிய உலகின் சிறந்த நாவல். ஆம் உண்மையிலேயே மிக சிறந்த நாவல் தான் எல்லா காலத்திலும் நிலைத்திருக்கும் மனித உணர்வை, அன்பை, காதலை, அகச்சிக்கலை பேசுகிறது நாவல்.

இதை எழுதிய போது ஆசிரியர் ஏதோ ஒரு மோன நிலைக்குள் ஆழ்ந்து தன்னை எதற்குள்ளும் திணித்து கொள்ளாது கரைத்து கொண்டு நம்மையும் கரைய வைத்திருக்கிறார். அன்னா கரீனினா

அன்னகரீனினா" நாவலை எழுதிய பிறகு லியோ டால்ஸ்டாய் கூறியது" ஒரு படைப்பு சிறந்தது என்று பாராட்டப்பட வேண்டுமென்றால் அந்தப் படைப்பின் அடிப்படை சிந்தனைகள் சிறந்ததாக இருக்க வேண்டும்.

எனது படைப்புகளில் நான் மிகவும் நேசிப்பது அந்த படைப்புளின் அடிப்படைச் சிந்தனைகளைத்தான்".

லியோ டால்ஸ்டாய் கூறியது ஒரு படைப்புக்கு மட்டுமல்ல, நமது வாழக்கைக்கும் பொருந்தும்.

வாழ்க்கைக்கு வேண்டிய நியதியையும் ஒழுங்கையும் தரவல்லது சிந்தனையே.

ஒரு நியதிக்கும் ஒழுங்கிற்கும் உட்பட்ட சத்தம் சங்கீதமாவதைப் போல, நடை நாட்டியமாவதைப் போல, நியதிக்கும் ஒழுங்கிற்கும் உட்பட்ட வாழ்க்கையே தெய்வீகமாகிறது. ஈர்க்கிறது. அப்படி ஈர்ப்பதுதான் நமது வேதாத்திரியமும்

நாவலின் மையப்புள்ளி அதீத காதல் என்ற ஒற்றை புள்ளி தான். ஆனால் அந்த மையத்தை சுற்றி டால்ஸ்டாய் வரைந்திருக்கும் வட்டங்கள், அவற்றின் பரிணாமங்கள் வெறும் காதலா என்று பார்த்தால் ஆம் என்றும் சொல்ல தோன்றுகிறது.

இல்லை என்றும். காதலுடன் நாட்டின் வரலாற்றையும், அதன் பொருளாதார சிக்கல்களையும், விவசாயிகளின் பிரச்சனைகளையும் விரிவாக அலசுகிறார்.

லெவின் பாத்திரம் மூலம் டால்ஸ்டாய் அரை நூற்றாண்டில் ரஷ்ய வரலாற்றில் நடந்த திருப்புமுனையின் இயற்கை தன்மையை பதிவு செய்திருக்கிறார்.



ஒரு பெண்ணின் உணர்வுகளை இவ்வளவு நுணுக்கமாக எப்படி ஒரு ஆணாக டால்ஸ்டாயால் சொல்ல முடிந்தது என்ற பிரமிப்பிலிருந்து இன்னும் விலக முடியவில்லை.. வேதாத்திரியமோ பெண்ணின் பெருமையையும் சிறப்பையும் மானுடத்திற்கு அழகாகச் சொல்லியருக்கிறது.

1877 இல் எழுதப்பட்ட டால்ஸ்டாயின் ''அன்னகரீனினா என்ற நாவல், திருமணமான பெண்ணான அன்னா கரேனினாவின் துயரமான காதலைச் சொல்கிறது.

மாஸ்கோ மற்றும் செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கின் உன்னத அடுக்குகளின் வாழ்க்கை மற்றும் பழக்க வழக்கங்கள் பற்றிய பெரிய அளவிலான படத்தை ஆசிரியர் தனது புத்தகத்தில் முன்வைக்க முடிந்தது.

டால்ஸ்டாய் என்னவெல்லாம் சொல்லியிருக்கிறார் இந்த நாவலில். உணர்வை, அந்த உணர்வால் விளையும் செயலை, செயலுக்கு பின் இருக்கும் விளைவை, விளைவுகளுக்குள் போய் சிக்கி கொள்ளும் அகத்தை, எதனால் எது விளைந்தது என்று பிரித்து பார்க்க முடியாத சிக்கலை எல்லாவற்றையும் பேசுகிறார்.

- குடும்பத்தின் அழிவு மற்றும் அன்புக்குரியவர்களின் துன்பத்தின் அடிப்படையில் மகிழ்ச்சியை உருவாக்குவது சாத்தியமில்லை என்று லெவ் நிகோலாயெவிச் தனது படைப்பில் வலியுறுத்துகிறார். கண்மூடித்தனமாக உணர்ச்சியைப் பின்பற்றுவது அழிவுகரமானது மற்றும் ஒரு நபரை உண்மையிலேயே மகிழ்ச்சியடையச் செய்ய முடியாது.
- கடவுள் நம்பிக்கையற்ற லெவின் மனைவியின் பிரசவத்தில் சிக்கல் ஏற்பட கடவுளிடம் கதறுவதும், (மனைவி பிரசவத்தில் ஆண் அனுபவிக்கும் மன வலியை, துன்பத்தை இவ்வளவு நுட்பமாக வேறு யாரும் பதிவு செய்ததில்லை)

- ஒரு குடும்பத்தில் எழும் கடுமையான பிரச்சினையுடன் இந்நாவல் துவங்குகிறது. சூறாவளி, புயல் என்று சின்னாபின்னப் படுத்தப்படும் குடும்ப உறவுகளை விவரித்து பின்பு புயலுக்கு பின் அமைதியை ஏற்படுத்திவிட்டுப் போகிறது.
- நாட்டின் வரலாற்றையும் அதன் பொருளாதார சிக்கல்களையும் விவசாயிகளின் பிரச்சனைகளையும், பெண்களின் பரிதாபமான நிலைகளையும், நில உடைமையாளர்களின் தோல்விகளையும் அலசுகிறது இந்நாவல்.
- திருமணம் மற்றும் குடும்பம், ஒழுக்கம் மற்றும் பிரபுக்களின் ஒழுக்கம் பற்றிய கேள்விகள். பொருளாதாரம் பிரச்சினைகள் – நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் அரசியல் வழிகள் பற்றி – ரஷ்யா மற்றும் மேற்கு நாடுகளின் மாநில அமைப்பு வடிவங்கள் பற்றி, கற்பித்தல் கேள்விகள் – குழந்தைகளை வளர்ப்பது, அழகியல் – கலை வளர்ச்சியின் திசை பற்றி, தத்துவம் – மனித அர்த்தம் பற்றி வாழ்க்கை.)

ஆனால் எழுத்தாளர் தனது கதையை நாவலின் முக்கிய கதாபாத்திரத்தின் வாழ்க்கையைப் பற்றிய கதையுடன் தொடங்கவில்லை. முதலில், டால்ஸ்டாய் தனது நேரத்தை, அவர் சார்ந்த சமூகத்தை வகைப்படுத்த முயற்சிக்கிறார்.

''எல்லா மகிழ்ச்சியான குடும்பங்களும் ஒரே மாதிரியானவை; ஒவ்வொரு மகிழ்ச்சியற்ற குடும்பமும் அதன் சொந்த வழியில் மகிழ்ச்சியற்றது.''

இந்த சொற்றொடர், ஒரு உன்னதமான, பாடப்புத்தகமாக மாறிய ஒரே ஒரு சொற்றொடர், நாவலில் பின்னர் குடும்ப உறவுகளைப் பற்றி பேசுவோம் என்பதற்கு நம்மை அழைக்கிறது.

லியோ டால்ஸ்டாயின் ''அன்னகரீனினா'' நாவலில் சேவைத் துறை, குடும்ப சிந்தனை. ''குடும்ப சிந்தனை'' ( ''அன்னகரீனினா'' நாவலை அடிப்படையாகக் கொண்டது ) அன்னகரீனாவின் நாவலில் குடும்ப உறவுகளின் உளவியல் சொல்லப்பட்டுள்ளது.

மொத்தத்தில் அன்னகரீனினா'' என்பது ஒரு பன்முகப் படைப்பு. பல கடுமையான பிரச்சனைகள், 60 மற்றும் 70 களில் ரஷ்யாவின் வாழ்க்கையின் மிகப்பெரிய கேள்விகள் இதில் எழுப்பப்படுகின்றன.

# வேதாத்திரியமும் ஒரு பன்முகப் படைப்பு

இறைவன் மனிதனுக்கு உரைத்தது பகவத் கீதை.
மனிதன்இறைவனுக்கு பாடியது திருமுறைகள்.
மனிதன் மனிதனுக்கு வழங்கியது திருக்குறள்.
சித்தர் மனிதனுக்கு அருளிய நூல் திருமந்திரம்.
அறிவு மனதுக்கு வழங்கியது வேதாத்திரியம்.

இறைவனை போற்றிப் பாடப்பட்டவை பக்தி பாடல்கள். மனிதனை வழிப்படுத்த பாடப்பட்டவை நீதிநூல்.

வேதாத்திரியமோ, பக்தி, ஞானம், நீதி, அரசியல், என அனைத்தையும் உள்ளடக்கிய யோகநூல்.

வேதாத்திரியம் எனும் அற்புதகருவூலம் வாழ்வியலின் பன்முகத்தையும் சுவை குன்றாது அமுதசுரபியாய் அள்ளி தந்துள்ளது.

வேதாத்திரியம் ஒரு பல்கலை கழகம். ஏனெனில் வேதாத்திரியத்தில் அனைத்து துறைகளும் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது.

உளவியல், வாழ்வியல், ஊழியியல், மருத்துவம், தத்துவம், இல்லறம், துறவறம், வானசாஸ்திரம், தத்துவம், உலக அமைதி, . . . . . . . . . . . . . . . .என பல்வேறு துறைகளையும் ஒன்றிணைத்து வாழ்வுக்கு வேண்டிய நன்னெறியை பன்முகமாக எடுத்துரைக்கிறது.

# வேதாத்திரியம் காட்டும் உளவியல்

உளம் என்றால் மனம். மனம் என்றால் என்ன ? மனம் ஒரு நிரந்தரமான பொருள் இல்லை. உயிரிலிருந்து தொடர்ந்து வந்து கொண்டேயிருக்கும் அலை இயக்கம்தான் மனம்.

மனதை அடக்க நினைத்தால் அலையும். மனத்தை அறிய நினைத்தால் அடங்கும். மனம் என்ற நிலத்தில் எது போட்டாலும் விளையும். ஆனால் எது போட வேண்டும் என்ற சிந்தித்து போட வேண்டும்.

மனதின் தன்மை எதுவோ அதுதான் மனிதனுடைய தன்மை. மனத்தின் உயர்வு எதுவோ அதுவே மனிதனின் உயர்வும் என்று வேதாத்திரியம் கூறுகிறது.

மனமே மனிதன். மனமானது உயிர், உடல் இவற்றோடு எந்த அளவுக்கு ஒற்றுமையாக இயங்குகிறதோ அந்த அளவுக்குத்தான் மனிதனின் அமைதி நிர்ணயிக்கப்படுகிறது. என்று வேதாத்திரியம் பதிவு செய்துள்ளது.

மனமதை அடக்கிவிட்டால் மட்டில்லா இன்பம், மனமதை தாழ்த்திவிட்டால் மயக்கத்தால் துன்பம். மனமானது அலைச்சுழலாகவோ, உணர்ச்சிவயப்பட்டோ, கவலையாகவோ இருக்குமேயானால் உடல்நலம் கெடும்.

தவத்தின் மூலமாக மனத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டால், நுண்மைப்படுத்திக் கொண்டால், திடப்படுத்திக் கொண்டால், மனத்திண்மை (வில்பவர்) என்று சொல்லக்கூடிய ஒரு ஆற்றலைப் பெற்றுக்கொண்டால், மனம் உறுதியாக இருக்கும்.

கெட்டியான இறைநிலையோடு ஒட்டிஇருக்கும் பொழுது எந்த எண்ணமும் நம்மைத் தூக்கிப் போகாது.

ஒருவர் துயரத்தாலும் துன்பத்தாலும் வாடும்பொழுது நம் எண்ண அலைகளின் மூலம் அவர்களுக்கு ஆறுதல் அளிக்கலாம் என்று வேதாத்திரியம் கூறுகிறது.

எண்ணம் மின்னலை விட அதிவேகமாக செல்லக்கூடியது. எண்ணத்தால் யாரையும் வசப்படுத்தவும் முடியும். விலக்கவும் முடியும்.

எண்ணியவெல்லாம் எண்ணியபடியே யாகும். எண்ணத்தில், உறுதியும், ஒழுங்கும் அமைந்திடில். நல்ல எண்ணத்தை நிலைப்படுத்தி சிந்தனையை சீராக்க வேண்டும் என்று வேதாத்திரியம் கூறுகிறது.

வாய் பேசாதபோது மனம் பேசுகிறது. மனம் பேசாதபோது இறைநிலை பேசுகிறது. மௌன சாதனைகளிலேயே சிறந்த பயனளிக்கும் பயிற்சி மௌன நோன்பு ஆகும்.

வாய்ப்பேச்சு இல்லாதிருத்தல் பேசா நோன்பு. மனம் அடக்கப் பயிற்சி அல்லது மனத்தைச் சீரமைத்துக் கொள்ளும் பயிற்சி.

மௌனத்தின் முழுநோக்கம், மனமடக்கம் அதற்குரிய சடங்குதான். வாய் திறந்து பேசாமை என்ற மன அடக்கத்திற்குரிய வழிகளை படைத்துள்ளார் வேதாத்திரி மகரிசி.

ஐம்புலனால் உலகதனைத் தொடரும் போது உன் அறிவு நிலை ''புத்தி''. புற மனமும் ஈதே. ஐம்புலனைக் கடந்து, முன் உணர்ந்த வற்றை அறிய அது ''சித்தம்''. நடு ''மனம்'' ஈதாகும்.

ஐம்புலனை அறிந்தவற்றைக் கடந்து, நுண் அணுவானால் ''அகங்காரம்''. அடிமனம் காண். ஐம்புலனை அறிந்தவற்றை, அணுவைத் தாண்டி ஆதிவெளி நீயானால், அறிவே தெய்வம் என்று மனம் குறித்து பல அரிய கருத்துக்களை வேதாத்திரியம் தெளிவாக்கியுள்ளது.

வாழ்வியல் அறம், பொருள், இன்பத்தை முப்பாலாக வாழ்வுக்கு தந்துள்ளது வேதாத்திரியம். அறம், பொருள், இன்பம், வீடு என நான்கினையும் வாழ்வுக்கு வளமாக தந்தவர் வேதாத்திரி மகரிஷி.

இன்றைய நிகழ்வுகளை காணும் போது அன்றே தீர்க்கதரிசியாய் எதை வாழ்வில் செய்ய வேண்டும், எதை செய்யக்கூடாது என தெளிவுபடுத்தியவர் வேதாத்திரி மகரிஷி.

வாழ்வியலில் முக்கிய பங்கு வகிப்பது இல்வாழ்க்கை. ஒருவர் பெற்ற ஞானத்தைப் பரிசோதிக்கக் கருவி ஒன்று இருக்குமேயானால் அது அவரது குடும்பத்தின் அமைதிதான். நீங்கள் கற்க வேண்டிய எல்லாப் பாடங்களையும் குடும்பத்துக்குள்ளேயே கற்றுக் கொள்ளலாம்.

வாழ்க்கைக்கு வேண்டிய கோட்பாடுகளும், விஞ்ஞான மெய்ஞ்ஞான அறிவும் வேதாத்திரியம் என்னும் கருவூலத்தில் பொதிந்துள்ளது.

வேதாத்திரியம் மானுடத்திற்கு வரமாக வந்த நு ?ல். பன்முகத்தேடலுக்கு பதிவாய் வந்த வேதநூல். பல்லாயிரம் ஆண்டு கால எல்லையை கடந்து நன்னெறியை திறக்க வந்த திறவுகோல் வேதாத்திரியம்.

## பெண்கள் உயர்வில் முரண்படும் டால்ஸ்டாயும் மகரிஷியும்

''பெண்கள் எதற்குமே ஒத்து வர மாட்டார்கள். அவர்களிடம் இருந்து விலகி விடுங்கள். மனிதனின் மன உறுதிக்கும், மன அமைதிக்கும் இடையூறாக இருப்பது பெண் இனம் தான்'' – டால்ஸ்டாய்.

# பெண்மையின் பெருமை போற்றும் வேதாத்திரியம்

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் – புவி
பேணி வளர்த்திடும் ஈசன்;
மண்ணுக் குள்ளேசில மூடர் – நல்ல
மாத ரறிவை கெடுத்தார்
கண்கள் இரண்டினில் ஒன்றைக் – குத்திக்
காட்சி கெடுத்திட லாமோ ?
பெண்கள் அறிவை வளர்த்தால் – வையம்
பேதமை யற்றிடுங் காணீர். – பாரதியார்

இதையேத்தான் மகரிஷி வேதாத்திரி, இன்னும் உறுதியாக,பெண்கள் ஆண்களைவிட சக்தி வாய்ந்தவர்கள் என்கிறார்.

உலகின் மிகப்பெரிய விஞ்ஞானிகளாகட்டும், படைப்பாளிகளாகட்டும், கண்டுபிடிப்பாளர் களாகட்டும், ஒரு துளி வித்தை வைத்து ஒரு அழகான குழந்தையை உருவாக்க முடியுமா ? முடியாது......

ஏனெனில் அது பெண்மைக்கே உரிய தாய்மையெனும் அரிய பொக்கிஷம்.

வேறெந்த சக்தியாலும் ஈடு செய்ய முடியாதது. ஆகவே பெண்மையை போற்றுவோம் மகரிஷிகளின் விளக்கத்திற்கு மறுபேச்சு தரமுடியுமா ?!

# படைப்பாளிகள்

லியோ டால்ஸ்டாய் மாபெருங் கலைஞர் என்றும், இலக்கிய மேதை என்றும் உலகமே கொண்டாடுகின்றது. நம் நாட்டு அறிவாளரிடையே அவருடைய நூல்கள் அதிகப் புகழ் பெற்றிருக்கின்றன.

போரும் அமைதியும், அன்னகரீனினா போன்ற பல்வேறு இலக்கியங்களைப் படைத்துள்ளார்.

வேதாத்திரி மகரிஷி ஞானக்களஞ்சியமாக இரண்டு தொகுதிகைளையும் சேர்த்து இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட கவிதைகளையும் 80க்கும் மேற்பட்ட நூல்களையும் வெளியிட்டுள்ளார்கள்.

கொங்கு நாட்டில் பொள்ளாச்சி நகருக்கு அருகே வால்பாறை மலையோரத்தில் ஆழியாறு நீர்த்தேக்கம் அமைந்துள்ள இடத்தில் அருட்பெருஞ்ஜோதி நகர் எனும் நகரம் வேதாத்திரி மகரிஷியால் 1984 கால கட்டத்தில் அமைக்கப்பட்டது.

அன்பொளி என்னும் ஆன்மீக இதழ் ஒன்றையும் வெளியிட்டார். இன்றும் தமிழ், ஆங்கிலம் மொழிகளில் வெளிவருகின்றன.

# லியோ டால்ஸ்டாயின் போரும் அமைதியும் வேதாத்திரி மகரிஷியின் உலக சமாதானமும்

டால்ஸ்டாய் சில ஆண்டுகள் ராணுவத்தில் சேர்ந்து பணியாற்றி வந்தார். இரண்டு பெரிய போர்களில் அவர் நேரில் கலந்துகொள்ள வேண்டியிருந்தது.

பின்னால் போர்த் தொழிலையே வெறுத்து இராணுவத்திலிருந்து வெளியேறினார்.

மனிதரை மனிதர் சுட்டுத் தள்ளுவதும், சுட்டு வதைப்பதும் மகா பாவம் என்றும் உலகிலே போரை ஒழித்துவிட வேண்டும் என்றும் அவர் ஒரு பெரிய பிரசாரப் போரை ஆரம்பித்தார்

போரும் அமைதியும் (War and Peace,) உருசிய மொழி உருசிய எழுத்தாளர் லியோ டால்ஸ்டாய் எழுதிய புதினம் ஆகும்.

இந்த நூல் முழுமையாக 1869ஆம் ஆண்டு முதன் முதலாகப் பதிப்பிக்கப்பட்டது.

இதிகாச அளவிலான இந்நூல் உலக இலக்கியத்தில் மிகவும் முதன்மையானதாகக் கருதப்படுகின்றது.

போரும் அமைதியும் ஐந்து உருசிய அரச குடும்பங்களின் பார்வையில், உருசியா மீதான பிரான்சியப் படையெடுப்பை அடுத்த நிகழ்வுகளையும் சார்மன்னர் சமூகத்தில் நெப்போலிய காலத்தின் தாக்கத்தையும் விரிவாக விவரிக்கின்றது.

போரும் அமைதியும் இந்த சிறந்த நாவலில், டால்ஸ்டாய், நெப்போலியன் போர்கள் முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதி வரை முடிய வரலாற்றின் சுமார் ஐம்பது வருடங்கள் முழுவதும் அனைத்து வகையான நிலைமைகளையும் பல கதாபாத்திரங்களின் வாழ்க்கை மாறுபாடுகளை விவரிக்கிறார்.

இந்தப் பின்னணியில் புகழ் பெற்ற ஆஸ்டர்லட்ஸ் போருடன் பிரஷியாவில் ரஷ்யர்களின் பிரச்சாரம், மற்றும் மாஸ்கோவை எரித்தல், இரண்டு ரஷ்ய உன்னத குடும்பங்களான போல்கோன்ஸஸா மற்றும் தி ரோடோன்ஸ், அதன் உறுப்பினர்கள் கவுண்ட பெட்ரோ பெஸ்சோவின் உருவத்தை இணைக்கும் வட்டமாக உள்ளடக்கியுள்ளார்.

இவரைச் சுற்றி குடும்ப வரலாற்றிருந்து தொடங்கும் எண்ணமற்ற மற்றும் சிக்கலான இழைகள் சுருக்கப்பட்டன.

பீட்டர் கதாபாத்திரம் இந்த நினைவுச் சின்ன நாவலிலில் டால்ஸ்டாயின் வாழும் இருப்பை பிரதிபலிக்கிறது.

இத்தகைய கலையுடன் வரலாற்றையும், கற்பனையையும் கலந்து, அரசர் நெப்போலியன் மற்றும் அலொக்சாண்டர் ஆகிய இரு பேரரசர்களின் காவியத்தை வழங்குகிறார்.

செய்ன்ட் பீட்டர்ஸ்பர்க்கின் அரங்குகளிலும் மாஸ்கோவின் சிறைகளிலும் கம்பீரமான அரண்மனைகளிலும் போர்க்களங்களிலும் நடக்கும் இந்தக் கதையின் ஆழத்தையும் பிரமாண்டத்தையும் பொருத்துவது கடினம்.

## ஞானிகளின் கருத்தாராய்வீர் என்கிறது வேதாத்திரியம்

''தனிமனிதன் கடமைகளும் கூட்டு வாழ்வின்
தத்துவமும் அடங்கியுள்ள இத்திட்டத்தால்
மனிதஇனம் பஞ்ச மகா பாதகத்தை
மனத்தினிலே நினைந்திடவும் வழியே இல்லை.
புனிதர்களாம் பத்தர், இயேசு, நபிகள், காந்தி
பூஜ்யர் பரஞ்சோதி மற்ற ஞானியார்கள்,
கனிவுடனே உலகமக்கள் உயர்வாய் வாழ
கண்டகனவும் செயலில் மலர்ந்து நிற்கும்.'' (உலக. சமா.பா.158)

# வேதாத்திரியம் தரும் உலக சமாதானம் (World Peace)

வேதாத்திரி மகரிஷி அவர்கள் 1957ல் 'உலக சமாதானம்' (World Peace) என்னும் நூல் ஒன்றை வெளியிட்டார். மனிதகுலம் அமைதியாக வாழ ஏற்ற கருத்துகளையும் சாதனை முறைகளையும் இந்த நூல் விளக்குகிறது..

இந்த நூல் உலக சமாதானத்திற்கான ஓர் திட்டமாகும் .இந்த திட்டம் உலக சமாதானத்திற்கான பல்வேறு சாத்தியக் கூறுகளையும், படிப்படியாக செயல்படுத்தப்பட வேண்டிய நடைமுறைகள், கூட்டுறவு செயல்பாடுகள் குறித்தும் விவரிக்கிறது.

இந்த நூலானது தமிழ் மற்றும் ஆங்கிலம் வழிப் பாடத்திட்டமாக்கப்பட்டு இன்று பல கல்லூரிகளில் உயர்கல்விக்கு வித்திட்டு இருக்கிறது.

''ஓர் உலக ஆட்சி உயர் ஒழுக்கத்தோடு உலகினிலே குழந்தைகளை வளர்க்கும் திட்டம்பார் முழுதும் பொருள் துறையில் சம நேர் நீதி முறைபல நாடும் ஒன்றிணைந்த பொருளாதாரம்சீர்திருத்த சிக்கனமாம் சிறந்ததோர் வாழ்வுதெய்வநிலை அகத்துணரும் இறைவணக்கம்நேர்வழியில் விஞ்ஞானம் பயனாய்க்கொள்ளும்நெறி முறைகள் இவை இணைந்த வாழ்வு காண்போம்.'' (ஞாக.பா.)



''உலகம்நீர், காற்றுவெயில், உணவுவித்து அனைத்தும்
உலகில்எந்த மனிதனுமே செய்ததில்லை. அறிவோம்
சிலமக்கள் குழுகுழுவாய்ச் சேர்ந்துபிற குழவைச்
சினங்கொண்டு. கொன்று வாழ்வைச் சீர்குலைக்கும் போரால்
பலகால தும் மக்கள் படும்துன்பம் நோக்கிப்
பாருங்கள்! குற்றமெங்கே ? நீதியெங்கே ? சொல்வீர்
நலநோக்கில் மனிதகுலத் துன்பங்கள் போக்கி,
நாடனைத்தும்ஒன்றுபட்டு வாழவழி காண்பீர்,'' (ஞாக.பா.252)

தனி உரிமையே பல யுத்தங்களுக்கு காரணம் என்கிறது வேதாத்திரியம் ?

''உரிமைத் தத்துவம்'' பிறந்த அந்த நாளில், அதற்குப் பதிலாக, எல்லோரும் கூட்டாகப் பொருள் சேமிக்க வேண்டும், –

கட்டாயம் உழைக்க வேண்டும், எல்லா பொருருள்களையும் பொதுவாகச் சேமித்து நிரவி அனுபவிக்க வேண்டும் என்ற கூட்டுறவுத் தத்துவம் தோன்றி இருந்தால் –

உரிமை என்ற உயர்ந்த ஒழுக்கம் ''நல்ல திட்டம், தவறாக மதிக்கப்பட்டு, சீரழிந்து, அதன் விளைவாக உலகத்தில் இதுவரையில நடந்த யுத்தங்கள் தோன்றி இருக்காது..

மனிதனைத் தனித் தனியாய், குறிப்பிடப்பட்ட பொருள்களின் சொந்தக்காரன்– உரிமையாளன்– என்று கொண்டு வேறு படுத்தியது.

நினைவில் குறுகிய எல்லையைத் தோற்றுவித்தும் ''தனி உடமைத் தத்துவம் '' ஆகும்.

''உரிமைத் தத்துவம் பிறந்த அந்த நாளில்,
ஒருவர் தன் முயற்சியினால் பெறும் பொருள்கள்
உரிமையாம் அங்குள்ளமனிதர்க் கென்றும்,
உடல் உழைப்பு கட்டாய மென்றும் செய்து,
உரிமையுடன் பலர் கூடி பொருள் சேமித்து,
ஒற்றுமையாய்ப் பகிர்ந்துண்டு வாழ்ந்திருந்தால்,
''உரிமை'' என்ற உயர் ஒழுக்கம்சிதறிக் கண்ட
உலக யுத்தம் எதுவுமே நடந்திராது.'' (உலக சமா.பா.33)

# சமாதான தூதுவர்கள் வேண்டும் – வேதாத்திரியம்

உலக சமாதான உயர் நோக்கம் கொண்டவர்களின் ஒத்துழைப்பாலும், அகில உலகிலும் உள்ள அரசாங்கங்களின் ஒத்துழைப்பாலும் கீழ்கண்ட திட்டத்தையும் ஆரம்பிக்க வேண்டும்.

முன்னேற்றமடைந்த நாடுகள் பின் தங்கிய நாடுகளுக்குச் செய்யும் உதவித் தொகையைக் கொண்டு ஆரம்பிக்கலாம்.

முதலில் ஒருவருடத்திற்கு ஒரு ஆயிரம் போ ?கள் ஆண்களும் பெண்களும் சம எண்ணிக்கை உடையோர்களாகவும் தம்பதிகளாகவும் உலக சமாதான திட்டத்தினபடி வாழ விருப்ப முள்ளோர்களாகவும் தேர்ந்தெடுக்க வேண்டும்.

அவர்களுக்குப் பல தொழில்களில் பழக்கத்தையும் திறமையையும் ஏற்படுத்த வேண்டும்.

உலக சமாதானத் திட்டத்தை மக்களுக்கு விளக்கும் திறமையை ஊட்டி, அவர்களைத் தம்பதிகளாகவே பரவலாக உலகமெங்கும் குடியேற்றி மக்களுக்கு சிந்தனா சக்தியைத் தூண்டி வாழ்வை வளப்படுத்தி ஒற்றுமையாக உலக சமாதானம் பெறும் ஆர்வத்தை அதிகரிக்கலாம்.

இத்தகைய சமாதானத்தை, தூதுவர்கள் உலகம் முழுவதும் ஒவ்வொரு கிராமத்திலும் வாழும் அளவிற்கும் இததகையோர்கள் எண்ணிக்கை பெருகும் அளவிற்கும் சமாதானத் தூதுவர்களை தோற்றுவிக்க வேண்டும்.

அவர்களைத் தயார் செய்தவற்காக ஏற்படும் செலவு தவிர அவர்கள் குடியேறும் கிராமங்களில் அவர்களாகவே ஏதேனும் தொழில் செய்து வாழ முறை வகுக்க வேண்டும்.

அந்தப் பகுதி மக்களுக்கு அவசியமான தொழில்களைக் கற்றுக் கொடுக்கும் தொண்டையும் பிரசார வேலையையும் அவர்கள் சமூக சேவையாகச் செய்ய வேண்டும்.

அவர்களின் தொழிலும் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளை வளர்ப்பதிலும் பொதுச் சங்கம் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

மேலும் இத்தகைய சமாதானத் தூதுவர்களைக் கொண்டு முதலில் மாவட்ட வாரியாகவும், பின்னர் தாலுக்கா வாரியாகவும் சர்வ தொழில் கலாசாலைகளை உண்டாக்க வேண்டும்.

அதில், நூல் நெசவு, மில், அச்சு இயந்திரம், மோட்டார் முதலிய வாகனங்களை பழுது பார்த்தல், வீடு கட்டும் தொழில், விவசாயம், சமையல் தொழில், மருத்துவம் இவைகளை இலவசமாக யாவரும் கற்றுக் கொள்ள வசதி செய்ய வேண்டும்.

இந்தத் தொழில் கலாசாலைகளில் வேலை செய்வோர்கள் பெரும்பாலும் உலக சமாதானத் திட்டப்படி வாழ்வை, பணம் பாசம் அற்று நடத்த உறுதி கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

இந்தத் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பொருள்கள் மக்களின் வாழ்வுக்கு அவசியமானதாகவும், பொருத்தமான விலையுள்ளதாகவும், தரமுடையதாகவும், எதிர்கால நல்லுலகை பிரதிபலிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

இந்தத் திட்டம் ஆரம்பிக்கும் போதுதான் மூலதனச் செலவே தவிர நாளுக்குநாள் இந்தத் திட்டதின் மூலம் வருமானம் பெருகும் நிர்வாகமும் எளிதாகிவிடும்

இவ்விதம் எல்லாத் துறைகளிலும் மக்களின் வாழ்வை உயர்த்த, தூய்மைப்படுத்த உலகசமாதான சங்கம் முயலலாம்.

அரசியலுக்காக நல்ல பொது நல நோக்கமுடைய அறிஞர்களைத் தேர்ந்தெடுக்கவும், அவர்கள் நல்ல முறையில் உலக சமாதான நோக்கத்துடன் செயலாற்றவும் பல திட்டங்களை வகுத்துக் கொடுக்கவும் வேண்டுமேயல்லாது, நேரிடையாக அரசியலை ஏற்கக்கூடாது.

அப்படி ஏற்றால், அரசியலில் குறுகிய நோக்கம் உடையோர்களால் இந்தச் சங்கம் ஒரு கட்சியாக மதிக்கப்பட ஏதுவாகும்.

எவ்விதத்தும் சர்வசமய சர்வகட்சி, சர்வதேச நோக்கங்களுடனேயே இச்சங்கம் செயலாற்றி இறுதியில், சங்கம், மக்கள், அரசாங்கம், உலகம், பொருளாதாரம், கட்சிகள். மதங்கள் அனைத்தும் ஒன்றாகிவிடும் தற்காலத்தை எதிர் நோக்கிச் செல்ல வேண்டும்.

''சமாதானத் தூதுவர்கள் பலரை தோற்றித்
தம்பதிகளாய் உலக முழுதும் சுற்றி
சமாதானம் மக்களிடம் நிலவச் செய்ய,
சன்மார்க்க நெறியுணர்ந்த, முறைவகுப்போம்
சமாதான நோக்குடையோர் ஒத்தழைப்பால்
சகலதொழில் கலாசாலை பலவும் தோற்றி
சமாதானப் புது உலகை சீருட்டி செய்வோம்.
சர்வதேச அறிஞர்குழு ஒன்றின்மூலம்.'' **(உலக சமா.பா.68)**

## Vethathirian Principles for the world

1. One world Government.
2. One world Economy.
3. One world Justice.
4. One world Army (Protecting borders of all Nations) & Ban all Wars.
5. One world Religion; Universal agreement on Truth (God), acceptable to all.
6. Reformation of culture.
7. Living under the guidance of Intellectuals.
8. Respecting womanhood and giving full equal rights.
9. Living in tune with law of nature.
10. Avoiding unnecessary rituals and festivals.
11. Sports to be made non commercial and only for children.
12. Education to include teaching of Laws of cause and effect.
13. Disseminating the philosophy of Magnetism.
14. Food and Water to be globalized and made available to all.

## டால்ஸ்டாய் பொன்மொழிகள்

- எல்லோரும் உலகை மாற்றவே நினைக்கிறார்கள்,

  ஒருவரும் தன்னை மாற்றிக்கொள்ள நினைப்பதில்லை"
- "வீரர்களிலேயே வலிமையானவர்கள் இவரிருவர் –

  காலம், பொறுமை"
- எல்லா மகிழ்ச்சியான குடும்பங்களும் மகிழ்ச்சியில் ஒத்திருக்கிறார்கள், ஒவ்வொரு மகிழ்ச்சியற்ற குடும்பமும் அவரவர் வழியில் மகிழ்ச்சியற்று இருக்கிறார்கள்."
- நேர்மையான வேலை மாளிகையைவிட பெரியது"
- என் கதையின் நாயகன், என் ஆன்மாவின் எல்லா சக்தியுடனும் நான் நேசிப்பவன், அவனது முழுமையான அழகில் நான் சித்தரிக்க முயற்சிப்பவன், இதுவரையிலும், இப்பொழுதும், இனியும் அழகாயிருப்பவன் "உண்மை (அ) சத்தியம்.

- ஒவ்வொரு ஆண் மற்றும் பெண்ணின் தொழில், மற்றவர்களுக்கு சேவை செய்வதே"
- "எல்லா வரலாறுகளிலும், அரசுகளால் உருவாக்கப்படாத போர்களே இல்லை, அரசுகளால் மட்டுமே, மக்கள் நலனை சாராமல் உருவாக்கப்படுபவை,

  வெற்றியிலும் அரசுகளுக்கே தீங்கு விளைவிக்கும்." "உண்மை என்னவென்றால், தேசம் என்பது சுரண்டுவதற்கு மட்டுமல்லாமல், குடிகளை கெடுக்கவும் உருவாக்கப்பட்ட சதி..

  இனி நான் எந்த அரசிலும் எங்கிருக்கும் அரசிலும் சேவை புரிய மாட்டேன்."
- தூய்மையான முழுமையான சோகம் என்பது தூய்மையான முழுமையான சந்தோஷத்தைப் போலவே சாத்தியமற்றது.
- வெற்றி என்பது ஒவ்வொரு முறையும் முதல் இடத்தைப் பெறுவது என்று பொருள் அன்று. வெற்றி பெற்றாய் என்றால் உன் செயல்பாடு சென்ற முறையை விட இம்முறை சிறப்பாக அமைந்துள்ளது என்று

## வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள்

- மனத்தூய்மை, சத்தான உணவு, அளவான உழைப்பு, முறையான ஓய்வு இவற்றைப் பின்பற்றினால் உடல்நலத்துடன் வாழலாம்.
- இன்றைய உலகில் பணத்திற்கும், பண்புக்கும் போட்டி நிலவுகிறது. இதில் பண்பு தான் தோற்றுப் போய் நிற்கிறது.
- பிறர் மீது கோபம் கொள்ளும் போது அந்தக் குறை நம்மிடம் இருக்கிறதா என்றும் சிந்திக்க வேண்டும்.
- அனைத்தும் ஒன்று என்று அறிந்தவன் செய்யும் செயல்கள் அனைத்தும், அன்பின் வெளிப்பாடாக இருக்கும்.
- அமைதி எங்கு தேடினாலும் கிடைக்கப் போவதில்லை. மனதின் உள்ளிருந்து தான் அதைப் பெற்றாக வேண்டும்.
- உண்மையில் எதிரி ஒருவன் இருக்கிறான் என்றால், மனதில் எழும் ஒழுங்கற்ற எண்ணங்களே.
- உணவில் எளிமை, உழைப்பில் நேர்மை, ஒழுக்கத்தில் உயர்வு இந்த மூன்றும் உத்தமர்களின் இயல்பு.

- கவலைப்படுவதால் மனதின் ஆற்றலும், உயிரின் சக்தியும் வீணாகிறது. எதிலும் அளவறிந்து வாழப் பழகினால் சிக்கலுக்கு இடமிருக்காது.
- ஆசையை சீர்படுத்தி வாழ்ந்தால் வாழ்வே ஆனந்த மயமாக விடும்.
- உழைப்பால் மனிதன் தலைநிமிர்ந்து வாழலாம். மற்றவர்களையும் வாழ வைக்கலாம்.
- உள்ளத்தில் பகையுணர்வு இருந்தால் யாரையும் வாழ்த்த முடியாது. வாழ்த்திப் பழகிவிட்டால் பகையுணர்வு நீங்கும்.
- ஆசைகளை அடியோடு ஒழிக்க முடியாது. அதை சீரமைத்துக் கொள்வதே நல்லது.
- நீ யார் என்று அறிய ஆர்வம் எழுந்து விட்டால், அது உன்னை அறியும் வரையில் அமைதி பெறுவதில்லை.
- எந்தச் சூழ்நிலையிலும் ஒரு மனிதனுக்கு கோபம் வராவிட்டால் அவன் ஞானம் அடைந்ததாகப் பொருள்.
- பேராசை, கோபம், கவலை, பொறாமை எண்ணங்களுக்கு இடம் அளிக்காமல் மனதைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.
- இயற்கையுடன் ஒத்துப்போனால் உடல்நலம் பாதித்தாலும், அததானாகவே சரிப்படுத்திக் கொள்ளும் தன்மை உடலுக்கு கிடைத்து விடும்.
- மனிதர்கள் மனம் போன போக்கில் வாழ்வு நடத்துவது வருந்தத்தக்கதாக உள்ளது. இதை தவிர்க்க வேண்டும்.
- ஆக்கத்துறையில் அறிவைச் செலுத்துங்கள். ஊக்கமுடன் உழையுங்கள். உயர்வு பெறுவீர்கள்.
- கோபப்படுவது நல்லதல்ல. நன்மை உண்டாகும் எனில் கோபப்படுவது போல நடித்தாலே போதும்.
- எல்லாரையும் வாழ்க வளமுடன் என்று சொல்லுங்கள்.
- இயற்கைக்கு எப்போதும் மதிப்பு கொடுங்கள். நீதி, நியாயத்தை வாழ்வில் பின்பற்றுங்கள். அப்போது வாழ்வில் வளமும் நலமும் நிறைந்து இருக்கும்.
- வாழ்வில் மனத்தூய்மை, ஒழுங்கான உணவுமுறை, அளவான உழைப்பு, ஓய்வு இவற்றை முறையாக கடைபிடித்தால் நோயின்றி ஆரோக்கியமாக வாழலாம்.

# நான் யார்? உன்னை அறிந்து கொள்ள

''எல்லோரும் உலகை மாற்றவே நினைக்கிறார்கள்,

ஒருவரும் தன்னை மாற்றிக்கொள்ள நினைப்பதில்லை'' என்பது லியோ டால்ஸ்டாயின் முக்கியமான பொன்மொழியாகும்.

இதைத்தான் வேதாத்திரியம் உன்னை அறிந்து கொள், நாள்தோறும் அகத்தாய்வு செய் – தற்சோதனை செய். என்று வலியுறுத்துகிறது.

நம்மையும் நம்மைச் சுற்றியுள்ள புறத்தையும் உள்ளதை உள்ளவாறு உணர்வதற்கான பக்குவத்தை பெறுவதற்கான பயிற்சிதான் 'தவம்'.

அறிய வேண்டியவைகளை முழுமையாக அறியப்பெற்று செய்யவேண்டிய செயல்களை நெறிபிறழாமல் செய்ய நம்மைத் தூண்டுவதே 'தவம்'.

ஞானம் பெருகி அஞ்ஞானத்தின் அவலம் குறைகிறது. கானகம் சென்றுதான் 'தவம்' செய்யவேண்டுமா ? வேண்டாம் !

இல்லறத்திலிருந்தே 'தவம்' செய்யலாம். தவத்தில்தான் 'அமைதி'யான மனம் நமக்கு அமைகிறது.

அந்த அமைதியால்தான் இல்லறத்தின் ஒவ்வொரு செயலிலும் இனிமையைக் காண்கின்ற பக்குவத்தை பெறமுடியும். ஞானிகள்தான் 'தவம்' இயற்றவேண்டுமா ? இல்லையில்லை !

குடும்பத்தாறுக்கே தவமும், அகத்தாய்வும் (தற்சோதனை) மிகவும் அவசியம். மன அமைதிக்கு அகத்தவமும், வினைத்தூய்மைக்கு அகத்தாய்வும் தேவை. அகத்தவம் மன ஆற்றலை பெருக்கும் அகத்தாய்வு மன ஆழுக்கை நீக்கும் !

இரண்டையும் பெற அன்பர்களே வாரீர் ! 'தத்துவம், விஞ்ஞானம், வாழ்க்கை நெறி ' இவை பற்றிய சிந்தனைத் தூண்டல் தான் மனவளக்கலை தவ மையங்கள், அறிவுத்திருக் கோயில்களில் தரப்படுகிறது.

# தற்சோதனை (Introspection)

எண்ணம், சொல், செயல் என்ற மூன்று பிரிவுக்குள் மனிதன் ஆற்றும் செயல்கள் அனைத்தும் அடங்கும்.

புலன் கவர்ச்சியில் சிக்கி நிற்கும் போது விளைவறியாமல் எண்ணுதலும், பேசுதலும், செயல் புரிதலும் இயல்பு. இவை பழக்கத்தால் திரும்பத் திரும்ப எழுச்சி பெற்று இயங்கும்.

காலத்திற்கும், இடத்திற்கும் ஏற்பத் தவறான எண்ணம், பேச்சு, செயல் இவற்றால் பல தீமைகள் எழுகின்றன, துன்பங்கள் விளைகின்றன.

தன்னிடமிருந்து அவ்வப்போது எழும் எண்ணம், சொல், செயல் இவற்றை ஆராய்ந்து தவறானவற்றை முதலில் கண்டுபிடிக்க வேண்டும்.

பிறகு தவறுகளைத் திருத்தி நலம் தரும் முறையில் எண்ணம், சொல், செயல்களை ஒழுங்கு படுத்த வேண்டும்.

இதற்கான உளப்பயிற்சியே தற்சோதனையாகும்.

முதலில் எண்ணங்களைத் திருத்தி அமைக்க ஒரு வாரம் ஒதுக்கிக் கொள்ளுங்கள். காலை, மாலை அமைதியான ஒரு இடத்தில் அமர்ந்து உங்களிலிருந்து எழும் எண்ணங்களின் தன்மைகளை ஆராயுங்கள்.

தவறானவற்றை– துன்பம் விளைக்கும் எண்ணங்களைக் குறிப்பு எடுத்துக் கொள்ளுங்கள்.

''இந்த எண்ணம் எனக்கு இந்த வகையில் துன்பம் அளிக்கும். ஆகவே இது தவறு. இதற்கு நான் இடங்கொடுக்க மாட்டேன்'' என்று பல தடவை அந்த எண்ணத்தோடு இணைப்பு எண்ணத்தைச் சேர்த்துவிடுங்கள்.

இதுபோன்றே அடுத்தவாரம் சொற்களைப் பற்றி ஆராயுங்கள். உங்களின் எந்தச் சொற்களால் உங்களுக்கோ, பிறருக்கோ வருத்தம் உண்டாகுமோ அவற்றைக் குறித்துக் கொண்டு மீண்டும் அத்தகைய சொற்களை பயன்படுத்தாதிருக்க மன உறுதி செய்து கொள்ளுங்கள்.

பிறரோடு பேசும்போது அத்தகைய சொற்கள் எழாமல் விழிப்போடு காத்து பழகுங்கள்.

மூன்றாவது வாரம் செயல்களை பற்றி ஆராயுங்கள். தவறான செயல்களைக் குறித்துக் கொண்டு அச்செயலை மீண்டும் அந்த முறையில் செய்ய மாட்டேன் என்று உறுதி கொள்ளுங்கள்.

நாள்தோறும் அத்தகைய செயல்களுக்குத் தொடர்பான நபரோ, தேவையோ, சூழ்நிலையோ வரும்போது மிகவும் விழிப்பாக இருங்கள். தவறு புரியாதபடி உங்களைக் காத்துக் கொள்ளுங்கள்.

இவ்வாறு உங்களை நீங்களே தற்சோதனை என்ற புடத்திலிட்டு உங்களுக்குத் தெளிவாகத் தெரியும் அழுக்குகளை நீக்கிக் கொள்ளுங்கள்.

இந்த மூன்று வாரத்திய தற்சோதனைப் பயிற்சி உங்கள் வாழ்நாள் முழுவதும் உங்களுக்கு விழிப்போடு இருக்கும் பழக்கத்தை அளிக்கும்.

வாழ்வதைத் தூய்மை ஆக்கும். வெற்றியளிக்கும். மகிழ்ச்சியும் அமைதியும் ஓங்கும். –– யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி

# மதங்களின் மூட நம்பிக்கைகள்

டால்ஸ்டாயின் 81–வருட வாழ்க்கை எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டிருந்தன. சிறு வயது முதலே அவருக்குத் தத்துவ ஞானத்தில் பற்றுண்டு. பிறவியிலிருந்தே அவர் கிறிஸ்தவர்.

ஆனால், பதினாறாவது வயதில் கிறிஸ்தவ மத ஸ்தாபனமான ரஷ்ய சர்ச்சிடம் – அவருக்கிருந்த நம்பிக்கை போய்விட்டது.

பின்னர் என்ன என்னவோ ஆராய்ச்சிகள் செய்யத் தொடங்கினார்.

இறைவனைப் பற்றியும் ஆன்மாவைப் பற்றியும் அவருக்கு அவரும் நம்பிக்கை ஏற்பட்டது.

இறுதியாகப் பத்தொன்பதாவது வயதில், அவருக்கு எதிலும் நம்பிக்கையில்லாது போயிற்று.

ஆயினும், இருபத்து மூன்றாவது வயதிலிருந்து மறுபடியும் தத்துவ – ஆராய்ச்சியில் அவர் மனம் ஈடுபட்டு வந்தது.

கிறிஸ்தவ சபையில் சேர்ந்து பெயரளவில் கிறிஸ்தவராகயிருப்பதைவிட, கிறிஸ்துவின் உண்மையான அடியாராயிருக்கவே டால்ஸ்டாய் விரும்பினார்.

சர்ச்சுக்கு வெளியில் இருந்துகொண்டே அவர் சமய ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தார்.

அவருடைய ஆராய்ச்சிகளையும், கொள்கையும் கண்டு ரஷ்ய சர்ச் அவரைப் 'பிரஷ்டம்' செய்து ஒதுக்கிவிட்டது.

டால்ஸ்டாய் கிறிஸ்தவத்தின் சில விதிகள் மீது தனது சொந்த மெட்டாபிசிக்ஸை உருவாக்குகிறார் என்பதற்கு இது வழிவகுக்கிறது.

கிறித்துவத்தைப் பற்றிய அவரது புரிதலில் கிறிஸ்துவின் தெய்வீகத்தை மறுப்பது மற்றும் அவரது உயிர்த்தெழுதல் ஆகியவை அடங்கும்,

அவரது கருத்துப்படி, கிறிஸ்து உலகிற்கு அறிவித்த தருணங்களை வலியுறுத்தும் நற்செய்தியின் மாற்றியமைக்கப்பட்ட உரை.

இந்த காலகட்டத்தில் டால்ஸ்டாவின் படைப்புகள் 4 தொகுதிகளை உள்ளடக்கியது

- ''பிடிவாத இறையியலின் விமர்சனம்'',
- ''என் நம்பிக்கை என்ன''
- ''வாழ்க்கை பற்றி''.
- இது அவரது மிக முக்கியமான சிந்தனை–தத்துவ நிலை.

மதங்களின் நோக்கமும் அறியாதோர் மயக்கமும்  வேதாத்திரியம்.

''மதங்கள்எல்லாம் எழுந்தவைகை அறியா தோர்கள்
    மருட்சியனால் தம்மதமே உயர்வென் றெண்ணி,
மதபோதை கொண்டுஆட்சி பலத்தி னாலும்,
    மக்கள்மிக விரும்புகின்ற செல்வத் தாலும்,
மதம்மாற்றி விடுகின்றார். இந்தச் செய்கை
    மயக்கத்தின்மேல மயக்கே. அறிஞர் தந்த
மதங்கள் எல்லாம் ஏழ்மைபஞ்ச பாத கத்தை
    மாற்றவன்றோ ? எம்மதத்தோர் இதை ஒழித்தார் ?'' (ஞாக.பா.611)

# “ சுயமாய்ச் சிந்தித்தே தெளிவாய் ” வேதாத்திரியம்

“ எல்லாம் வல்ல தெய்வமது எங்கும் உள்ளது நீக்கமற
சொல்லால் மட்டும் நம்பாதே சுயமாய்ச் சிந்தித்தே தெளிவாய்
வல்லாய் உடலில் இயக்கமவன் வாழ்வில் உயிரில் அறிவுமவன்.
கல்லார் கற்றார் செயல் விளைவாய்க்காணும் இன்ப துன்பமவன்.
அவனின் இயக்கம் அணுவாற்றல் அணுவின் கூட்டுப் பக்குவம் நீ
அவனில் தான் நீ உன்னில் அவன் அவன் யார் ? நீயார் ? பிரிவேது ?
அவனை மறந்தால் நீ சிறியோன் அவனை அறிந்தால் நீ பெரியோன்
அவன் நீ ஒன்றாய் அறிந்த இடம் அறிவு முழுமை அது முக்தி. ”

# தத்துவ சிந்தனைகள்

வாழ்க்கையின் அர்த்தத்தைத் தேடுவது என்பது மிகவும் வெளிப்படையான மற்றும் மீறமுடியாத வீரத் தேடலாக இருக்கலாம்,

இது பல நூற்றாண்டுகள் பழமையான மரபுகளுடன் ஒரு உணர்ச்சிமிக்க போராட்டத்தில் வழங்கப்படுகிறது.

அவர் ”இந்த யுகத்தின் ஆவியை” எதிர்த்தார், இது அவரை பிரத்தியேகமாக ரஷ்ய தத்துவத்தின் எல்லைக்கு அப்பால் அழைத்துச் செல்கிறது மற்றும் சகாப்தத்தின் மற்ற சிறந்த சிந்தனையாளர்கள் மற்றும் தத்துவவாதிகளுடன் அவரை இணையாக வைக்கிறது.

### லியோ டால்ஸ்டாய் நிறுவிய தத்துவக் கோட்பாடுபளில் சில

- மண் சாகுபடி
- ஒற்றுமையின் தத்துவம்,
- ஜனரஞ்சகவாதம்,
- அகிம்சையின் நெறிமுறைகள்
- உங்களை அறிந்து கொள்ளுங்கள்
- தீமையை எதிர்க்காதே
- தாய்நாட்டிற்கு உண்மையாக சேவை செய்யுங்கள்

- உள்ளுணர்வு
- வாழ்க்கையின் தத்துவம்
- ஒற்றுமையின் தத்துவம்
- காஸ்மிசம்
- ஆழ்நிலை சாம்ராஜ்யம்

## வேதாத்திரி மகரிசியின் தத்துவ தரிசனங்கள்

1. வேதாத்திரியத்தின் சுத்தவெளித் தத்துவம்.
2. அலைத் தத்துவம்
3. அறிவுத் தத்துவம்
4. வேதாத்திரியத்தின் காந்தத் தத்துவம்.
5. வேதாத்திரியத்தின் விண் தத்துவம்
6. வேதாத்திரியத்தின் விரிவலைத் தத்துவம்
7. வேதாத்திரியத்தின் வான்காந்தத் தத்துவம்.
8. வேதாத்திரியத்தின் பிரபஞ்சத் தன்மாற்றச் சரித்திரம்.
9. வேதாத்திரியத்தின்  கடவுள் தத்துவம்
10. வேதாத்திரியத்தின் வாழ்க்கைத் தத்துவம்.
11. வேதாத்திரியத்தின் கருமையம்.
12. வேதாத்திரியத்தில் உயிர்
13. வேதாத்திரியத்தில் மனம்
14. வேதாத்தரியத்தில் சித்தாந்தம் வேதாந்தம்
15. வேதாத்திரியத்தின் மறுபிறவி
16. வேதாத்திரியத்தின் சொர்க்கமும் நரகமும்.
17. வேதாத்திரியத்தின் புண்ணியம் பாவம்.
18. வேதாத்திரியத்தில் விதி மதி
19. வேதாத்திரியத்தின் செயல்விளைவுத் தத்துவம்

20. வேதாத்திரியத்தின் ஆத்திகம் நாத்திகம்

21. வேதாத்திரியத்தின் வேதாந்த தத்துவம்

22. வேதாத்திரியத்தின் சைவேடி தத்துவம்.

23. வேதாத்திரியத்தின் சைவ சித்தாந்த தத்துவம் தத்துவம்.

24. வேதாத்திரியத்தின் யோகத் தத்துவம்.

# வாழ்க்கையும் மரணமும்

வாழ்க்கை (லியோ டால்ஸ்டாய்)/வாழ்வும் மரணமும் சத்தியத்தின் குரல், 'மரணம் கிடையாது!' என்று மனிதர்களுக்குச் சொல்லுகிறது.

இயேசுவும் இதையே சொன்னார் : 'நானே வாழ்வும், மறு பிறப்பும்; என்னிடம் நம்பிக்கையுள்ளவன் இறந்தவனாயினும் அவன் வாழ்பவனாவான்.

### லியோ டால்ஸ்டாயின் கட்டுரைகளில் முக்கியமான ஒன்று

'வாழ்க்கை', இது மிகவும் விரிவானது. உலகம், உயிர், உடல், வாழ்வு, மரணம், இன்பம், துன்பம் முதலிய விஷயங்களைப் பற்றி இந்நூலில் விரிவாக ஆராய்ச்சி செய்யப் பெற்றிருக்கிறது.

இது டால்ஸ்டாயின் தனி ஆராய்ச்சி—சமய நூல்கள், புராணங்களிலுள்ள வாக்கியங்களைத் தொகுத்துக் கூறப்பட்டதன்று.

ஆசிரியர் தாமாகவே ஆராயாது, உண்மையான மனித வாழ்க்கை எது என்பதை இதில் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

இந்த புத்தகத்தில் பத்து தலைப்புகளில் டால்ஸ்டாய் வாழ்வு பற்றியும் மரணம் பற்றியும் விரிவாகச் சொல்லியுள்ளார்.

1. மானிட வாழ்வின் முக்கிய முரண்பாடு

2. தவறான கொள்கைகள்

3. மிருக வாழ்க்கையும் மனித வாழ்க்கையும்

4. உண்மை வாழ்வின் உதயம்

5. உண்மை அறிவும் போலி அறிவும்

6. தியாகமே வாழ்வின் வழி
7. அன்பின் உதயம்
8. வாழ்வும் மரணமும்
9. இறந்த பின்னும் வாழ்க்கை உண்டு
10. வாழ்வின் துயரங்கள்

அக்காலத்தில் டால்ஸ்டாயின் இலக்கியத்தை உலகில் பல நாடுகளும் போற்றி வந்தன.

அவர் தமது ஐம்பதாவது வயதில் (1877–இல்) சமய ஆராய்ச்சியில் தீவிரமாக இறங்கிப் பத்து ஆண்டுகளாக அதிலேயே ஈடுபட்டிருந்தார்.

அந்த ஆராய்ச்சியன் விளைவாக அவர் எழுதிய கட்டுரைகளில் ஒன்று இந்த 'வாழ்க்கை'.

இந் நூலை ரஷ்ய நாட்டில் வெளியிடக் கூடாது என்று அக்காலத்தில் ஜார் சக்கரவர்த்தியின் அரசாங்கம் தடை செய்து விட்டது.

பல ஆண்டுகட்குப் பின் இது முதன் முதலாக சுவிட்ஜர்லாந்து தேசத்தில் வெளியிடப் பெற்றது.

பின்னர் பிரெஞ்சு மொழியிலும், ஆங்கிலம் முதலிய மொழிகளிலும் வெளி வந்தது.

இந்தத் தமிழ் மொழிபெயர்ப்பு 'ப்ரீ ஏஜ் பிரஸ்' (Free Age Press) வெளியிட்ட நூலிலிருந்து சுருக்கி எழுதப் பெற்றது.

இந் நூலின் ஆரம்பத்தில் ஆசிரியர் 'வாழ்க்கை என்பது என்ன ?' என்ற கேள்விக்குப் பதில் கூறுகிறார். நூலின் முடிவில், மரணத்தைப் பற்றி ஆராய்ந்து, 'மரணம் என்பது என்ன ?' என்பதை விளக்கியுள்ளார்.

இந் நூல் ஆசிரியரின் அரிய ஆராய்ச்சிகளில் ஒன்று. அவருடைய மற்ற நூல்களுக்கும், அவருடைய வாழ்க்கைக்கும் இதை ஒரு திறவுகோல் என்று சொல்லலாம்.

எவ்வளவு தெளிவாக எழுதினாலும், விஷயம் பெரிதாகையால், ஒவ்வொரு வரியையும் படித்த பிறகு சிந்தனை செய்து பார்த்தால்தான் பொருள் விளங்கும்.

# மரணத்திற்கு எவரும் அஞ்சார் – வேதாத்திரியம்

மரணத்தை நினைத்து. அஞ்சி, நடுங்கும் கோழை
　　மனிதனோ அன்றேது ? யாவரேனும்
மரணம் அடைந்தோர் சவத்தைப் பார்த்துப் பார்த்து
　　மனங்கலங்கி, உளம் உருகி. அழுவாரேது ?
மரணம்தான் ஜீவஇனம் இன்ப துன்ப
　　மாகடலைத் தாண்டும் உயர் நிகழச்சி என்று
மரணத்தின் நிலையறிந்து, அதற்கு அஞ்சா
　　மனநிலையில், தெளிவுடனே வாழ்வார் மக்கள்.'' (உலக சமா.பா..181)

வாழ்வுக்குத் தேவையான அறநெறிகள் என்ன என்பதையும் வேதாத்திரி மகரிஷி வகுத்து தந்துள்ளார்கள்.

1. வாழ்வின் நோக்கம், தேவைகள், விருப்பங்கள் இவற்றை மதிப்பீட்டுக் கொள்ள வேண்டும். இவை ஒன்றுக்கொன்று முரண்படாமல் அமைத்துக் கொள்ள வேண்டும்.
2. தனக்கு அமைந்துள்ள சூழ்நிலைகளையும் வாய்ப்புக்களையும் கணித்துக் கொள்ள வேண்டும்.
3. இயற்கையின் ஒழுங்கமைப்பும், அதன் ஆற்றலின் விளைவான காரண காரிய விளைவு விதியைப் பற்றி உணர்ந்து கொண்டு மதித்துப் போற்றி நடக்க வேண்டும்.
4. வாழவேண்டிய முறைகளையும், ஆற்றவேண்டிய செயல்களையும் வரிசைப்படுத்திக் கொள்ள வேண்டும்.
5. இத்தகைய வாழ்வுக்குத் தன்னைத் தகுதியாக்கிக் கொள்வதற்கு உடல் வலிமையையும், திறனையும், அறிவையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.
6. விடாமுயற்சியோடும், எண்ணம், சொல், செயல் இவற்றைப் பயன்படுத்த வேண்டும்.
7. அவ்வப்போது வாழ்க்கையில் ஏற்படும் தவறுகளைத் தற்சோதனை, செயல்திருத்தம் என்ற இரண்டு வழிகளிலும் திருத்தித் தன்னைத் தூய்மையாக்கிக் கொண்டே இருத்தல் வேண்டும்.

இத்தகைய அறநெறிகளை வாழ்விலே பின்பற்றி செயல்பட்டால், மனித வாழ்வில் உள்ள் சிக்கல்கள் அனைத்தையும் படிப்படியாகக் குறைந்து நிறைவும் அமைதியும் உடைய வாழ்க்கை வாழலாம் என்று வேதாத்திரியார் வழி காட்டுகின்றார்.

இந்த நோக்கம் நிறைவேண்டுமானால் முதலில் சிந்தனையாற்றலை மக்களிடம் தூண்டிவிட வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

இதுவே தினசரி வாழ்விலும் கல்வி முறையிலும் மனித குலத்திற்கு வழிகாட்டியாய் அமைய வேண்டும்.

இந்த அடிப்படையில் சிந்தித்துத் தேவையற்ற செயல்களை, சடங்கு முறைகளை ஒதுக்கிவிட்டு, வாழ்க்கைத் திட்டங்களை முறையாக வகுத்துக் கொண்டு வாழவேண்டிய அவசியத்தை சிந்தித்து உணரும் போது மனித சமுதாயம் உயர்வு பெறும் என்று வேதாத்திரியார் கூறுகின்றார்.

''அருள்விளக்கம் இல்லாத குறையில் மக்கள்
அனைத்து நலனும் இழந்து துன்பம் ஏற்று,
பொருள்காக்க, பூகாக்க, பொன்னைக் காக்கப்,
போரிட்டு மடிகின்றார் அந்தோ ! வாழ்வில்
மருள்போக்கி, மக்கள் ஒத்துதவி வாழ,
மனத்தூய்மை வினைத்தூய்மை பெற்றுள் ளத்தில்
இருள்போக்கும் அகத்தவமும், அகத்தாய்வும் பின்
இனிதளிக்கும் குண்டலின் யோகம் கற்பீர்.'' (ஞாக.பா.1484)

- லியோ டால்ஸ்டாயும் வேதாத்திரி மகரிஷியும் புரட்சி எழுத்தாளர்கள் வரிசையில் வருபவர்கள்.
- லியோ டால்ஸ்டாயும் வேதாத்திரி மகரிஷியும் ஆன்ம ஞானிகள் வரிசையிலும் வருபவர்கள்..
- இருவரும் பிறவி எழுத்தாளர்கள். இருவரின் எழுத்துக்களிலும் சொல் புதிது, பொருள் புதிது. புரிந்து கொள்வதும் எளிது..
- டால்ஸ்டாய் மக்கள் எழுத்தாளர். மானுடம் காக்கவந்தவர். புது நெறி காட்டிய எழுத்தாளர்.. தனது புதினத்தில் வரும் மனிதர்கள் வாயிலாக உலகத்துக்கு தத்துவத்தை சொன்னவர்.

- ◈ எழுத்துக்குப் புது வடிவம் கொடுத்த டால்ஸ்டாய் பாரம்பரியத்தில் வந்தவர் வேதாத்திரி மகரிஷி.
- ◈ லியோ டால்ஸ்டாயும் வேதாத்திரி மகரிஷியும் ஒருவகைச் எழுத்துச் சித்தர்கள்..
- ◈ லியோ டால்ஸ்டாயும் வேதாத்திரி மகரிஷியும் தத்துவஞானிகள் வரிசையில் வருபவர்கள்.
- ◈ இருவரும் பிறவி தத்துவஞானிகள்
- ◈ இருவரும் மானுடம் காக்கவந்த மகாஞானிகள். புது நெறி காட்டிய சிந்தனையாளர்கள்.
- ◈ லியோ டால்ஸ்டாயும் வேதாத்திரி மகரிஷியும் சமுதாய சீர்திருத்தவாதிகள்.
- ◈ லியோ டால்ஸ்டாயும் வேதாத்திரி மகரிஷியும் ஒருவகைச் புரட்சியாளாகள்.
- ◈ நாட்டுமக்கள் சிந்தனையை தனது நாவல்களின் மூலம் தூண்டி விட்டவர் டால்ஸ்டாய். ஆன்மாவின் அடிமைத் தளையை உடைக்க வீறு கொண்டு எழுந்தவர் மகரிஷி.
- ◈ லியோ டால்ஸ்டாயும் வேதாத்திரி மகரிஷியும் சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் மாற்றி புதிய சமுதாயத்தைப் படைக்க வந்த ஞானிகள்.
- ◈ லியோ டால்ஸ்டாயும் வேதாத்திரி மகரிஷியும் பன்முக ஞானம் படைத்தவர்கள்.
- ◈ பல செய்திகளை டால்ஸ்டாய் முன்மொழிகிறார். மகரிஷி அறிவியல் கண்ணோட்டத்துடன் அவைகளை வழி மொழிகின்றார்.
- ◈ டால்ஸ்டாயின் கொடை – புகழ்பெற்ற புதினங்கள‘‘. மகரிஷியின் கொடை – வேதாத்திரியம்.
- ◈ மொழி வளம், கற்பனை நயம், சமூகப் பார்வை, பிரக்ஞையுடன் கூடிய சீற்றம் எல்லாம் இணைந்து–இணக்கமாகி, இவர்களை ஓர் இணையற்ற தத்துவஞானிகளாக ஆக்கியிருக்கின்றன.
- ◈ எளிய சொற்களால் எழுச்சியூட்டும் இவர்களது எழுத்துக்கள் சமுதாய மேம்பாட்டிற்கும், உலக சமாதானத்திற்குமான உரத்த சிந்தனைகள் தெரிகின்றன.
- ◈ லியோ டால்ஸ்டாயும் வேதாத்திரி மகரிஷியும் போரில்லா நல்லுலகம் காண விழைந்தவர்கள்.
- ◈ லியோ டால்ஸ்டாயும் வேதாத்திரி மகரிஷியும் உலக அமைதிக்கு வித்திட்டவர்கள்
- ◈ லியோ டால்ஸ்டாயும் வேதாத்திரி மகரிஷியும், தம் எழுத்துக் கைகளால் இந்த தரணியைத் தட்டி எழுப்புவதைத் தலையாயக் கடமையாய்க கொண்டிருந்தனர்.

◈ ஒரு யுக விழிப்பை ஏற்படுத்துவதே இவர்களது இருவரது இலக்காக இருந்திருக்கிறது. – அந்த முயற்சியிலே இவர்களுக்கு வெற்றியும் கிடைத்தது.

மனித வாழ்க்கை என்பது இறைநிலையை நாடிய அறிவின் பயணம்.

லியோ டால்ஸ்டாய், வேதாத்திரி மகரிஷி போன்ற உலக சிந்தனையாளர்கள் கூறும் இத்தகைய அறநெறிகளை வாழ்விலே பின்பற்றி செயல்பட்டால், நமது வாழ்வு இனிமையாகவும், அமைதியாகவும், சிறப்பாகவும் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

நல்லதையே செய்யச் செய்ய நல்ல எண்ணங்கள், நல்ல செயல்கள், நல்ல வாழ்க்கை வந்துவிடும்.

மனிதனுடைய மனதிலே ஒரு நிறைவு வேண்டும். அந்த நிறைவிலிருந்து எழக்கூடியதுதான் இன்பமான வாழ்வு என்பதாகும். இத்தகைய இன்பமான வாழ்வை நோக்கி ஆனந்தமாக பயணிப்போம்.

டால்ஸ்டாய் வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம்.

ஆனந்தம்! ஆனந்தம்!! ஆனந்தமே!!! வாழத் தெரிந்திடில் ஆனந்தமே

## துணைநின்ற நூல்கள்


- ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரியப் பதிப்பகம், ஈரோடு
- உலக சமாதானம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரியப்
- போரில்லா நல்லுலகம், மன்னார்குடி பானுகுமார், இணையதளம்
- வேதாத்திரியத் தத்துவங்கள் மன்னார்குடி பானுகுமார், இணையதளம்
- வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000, மன்னார்குடி பானுகுமார், விஜயா பதிப்பகம், கோவை.
- போரும் அமைதியும் லியோ டால்ஸ்டாய்
- இணையதளத்தில் டால்ஸ்டாய்
- அன்னகரீனினா, லியோ டால்டாய்
- A Confession Leo Tolstoy
- The Three Questions Leo Tolstoy
- The Prisoner of the Caucasus Leo Tolstoy
- The Prisoner of the Caucasus Leo Tolstoy




## ஆன்மீகம்

1. தியானம் பழக 100 தியான சிந்தனைகள்
2. அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்
3. கோள்களை வென்ற இடைக்காட்டுச் சித்தர்

## வாழ்க்கை வரலாறு

1. நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
2. புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
3. இயேசுவின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
4. குருவுடன் வாழ்ந்தவர் (புலவர் தியாகராஜனார்)
5. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி ?
3. காலமே உன் உயிர்

4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை

## வேதாத்திரி மகரிஷி 1

1. இந்திய தத்துவ வரலாற்றில் வேதாத்திரி மகரிஷி
2. வேதாத்திரி மகரிஷி பற்றி 100 அறிஞர்கள்.
3. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 1)
4. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 2)
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 3 )
6. தினசரி தியானம்.
7. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
8. "வாழ்க வளமுடன்" என்ற வார்த்தை ! சரியா ? தவறா ? இலக்கணம் என்ன சொல்கிறது ?
9. பன்முகப்புரட்சியில் வேதாத்திரி மகரிஷி
10. பன்முகப் பார்வையில் வேதாத்திரி மகரிஷி
11. வேதாத்திரி மகரிஷியின் தத்துவ தரிசனங்கள்
12. எல்லாம் வல்ல தெய்வமது
13. போரில்லா நல்லுலகம்
14. அதுவானால் அதுவே சொல்லும்
15. உய்யும் வகை தேடி அலைந்தேன்.
16. தினந்தோறும் வேதாத்திரியம்
17. வாழும் வேதாத்திரியம்
18. என்னைச் செதுக்கிய வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம்
19. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
20. மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
21. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே

22. வேதாத்திரியம் கற்போம்
23. மனைவிக்கு மரியாதை
24. எல்லாம் வல்ல தெய்வமது
25. வேதாத்திரியப் பார்வையில் வறுமை என்பது இல்லை.
26. அவதாரப் புருஷர் அருட்தந்தை
27. வேதாத்திரியம் ஒரு ஜீவ யாத்திரை
28. வேதாத்திரியத்தில் அறம்

## ஒப்பாய்வு (வேதாத்திரி மகரிஷி)

1. வள்ளலாரும் வேதாத்திரி மகரிஷியும்.
2. மகாவீரரும் வேதாத்திரி மகரிஷியும்
3. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும்
4. ஞாலம் போற்றும் ஞானிகள்
5. வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்.
6. ஞானதீபமும் ஞான ஒளியும்.
7. கிழக்கும் மேற்கும்
8. வேதமுதல்வரும் வேதாத்திரியும்
9. ஞான வள்ளல்கள் (ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரஷியும்)
10. பாமரமக்களின் தத்துவஞானிகள் (அச்சில்)
11. சித்தர்களும் வேதாத்திரி மகரிஷியும்.
12. மாணிக்க வாசகரும் வேதாத்திரியும்
13. சிவவாக்கியாரும் வேதாத்திரி மகரிஷியும்.
14. ஆனந்தக் களிப்பும் பேரின்பக் களிப்பும்
15. சுகவாரியும் பேரின்ப ஊற்றும்
16. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்

## தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்.
2. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு.
3. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்.
4. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோமானந்தம்.
5. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எங்கும் நிறைந்த பொருள்..
6. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சச்திதானந்த சிவம்.
7. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் கருணாகரக் கடவுள்
8. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
9. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பாயப்புலி
10. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பைங்கிளிக் கண்ணி
11. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொன்னை மாதரை
12. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆகார புவனம்
13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எந்நாட்கண்ணி
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சித்தர் கணம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மலைவளர்க் காதலி
17. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இந்திரியங்களின் கொட்டம்
18. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மனம் என்னும் மாயை
19. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆறுபகைவர்கள்
20. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் அருள்தாகம்
21. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இறைவழிபாடு
22. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் வழிபாடு ஏன்,
23. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்த இயல்பு
24. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 1
25. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 2
26. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 3

## திருவாசகமும் வேதாத்திரியமும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
2. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து.
3. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து.
4. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலாப் பத்து.
5. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து.
6. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து.
7. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்தப் பத்து.
8. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்தப் பத்து.
9. வேதாத்திரியப் பார்வையில்திருவாசகத்தின் பிரார்த்தனைப் பத்து.
10. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
11. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
12. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சோ பதிகம்
13. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
14. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
15. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
16. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
17. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
18. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
19. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
20. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
21. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
22. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து

## பாரதியாரும் வேதாத்திரியமும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப்பாடல்கள்
2. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவப் பாடல்கள்
3. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
4. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் மானுட சிந்தனைகள்

## ஜென்னும் வேதாத்திரியமும்

1. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
2. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
3. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
4. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
5. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5

## தாயுமானவர் தாயுமானவர்

1. சேரவாரும் ஜெகத்தீரே
2. தாயுமானவரின் இலக்கிய நயம்
3. தாயுமானவரின் மெய்ப்பொருள்
4. தாயுமானவரின் சமயநெறி
5. தாயுமானவரின் உடல் பொய்யுறவா ?
6. தாயுமானவரின் கடவுள் கோட்பாடு
7. தாயுமானவரும் மகான்களும்
8. தாயுமானவர் ஆன்மீக வாதியா ? அரசியல் ஞானியா ?
9. தாயுமானவர் தரும் இடம், பொருள், ஏவல்
10. தாயுமானவரின் அத்வைதமும் வேதாத்திரியின் அத்வைதமும்
11. தாயுமானவரின் ஆன்மீகச் சிந்தனைகள்
12. தாயுமானவரின் ஞானதாகம்
13. தாயுமானவரின் இலட்சியப் பயணம்
14. தாயுமானவரின் பிரபஞ்சக் கோட்பாடு
15. தாயுமானவரின் உயிர் விளக்கம்
16. GARLAND OF PARAAPARAM
17. தாயுமானவர் போற்றும் அறம்
18. அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானவர்
19. ஏன் அவதரித்தார்கள் ?

20. தாயுமானவரின் பரநடையும் உலக நடையும்
21. இன்பம் பெறும் வழி யாது ? தாயுமானவர்
22. தாயுமானவர் பாடல்களில் மனம்
23. தாயுமானவர் வழிபாடு ஏன் ?
24. தாயுமானவருக்கு மறுபிறவி உண்டா ?
25. கல்லாத பேர்களே நல்லவர்கள் தாயுமானவர்
26. கடவுளின் விலாசம் தருகிறார் தாயுமானவர்
27. தாயுமானவர் எதை பலி கொடுக்கச் சொன்னார் ?
28. தாயுமானவர் தரும் இறைவழிபாடு
29. தாயுமானவருடன் வாழ்வோம்
30. தாயுமானவரின் உவமைகள் 100

## ஜென்னும் திருவாசகமும்

1. ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
2. ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
3. ஜென்னும் திருவாசகமும் பாகம் 3

## புலவர் தியாகராஜனார்

1. குருவுடன் வாழ்ந்தவர்
2. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
3. புலவர் தியாகராஜனார் அரிய செய்திகள் 100
4. குரு பக்தியின் வடிவம் புலவர் தியாகராஜனார்

## வரலாறு மன்னார்குடி

1. மன்னார்குடி மன்னார்குடிதான் அரிய செய்திகள் 1000
2. மன்னார்குடி வரலாறு

## பயண நூல்கள்

1. ஞாபகம் வருதே ஊர் ஞாபகம் வருதே !
2. அமெரிக்க மண்ணில் ஆறு மாதங்கள்

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி ?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்.
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை
6. தன்னம்பிக்கை மலர்கள்

## சிறுகதைகள்

1. செயலே விளைவு
2. தவம்
3. தொலைந்து போன உறவுகள்
4. பத்மாவும் கதவும்

## ஆராய்ச்சி

## நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்

## பானுகுமார் படைப்புலகம்

1. நானும் என் எழுத்தும்
2. நீங்களும் எழுதலாம் வாங்க
3. புத்தகம் எழுதலாம் வாங்க
4. வேதாத்திரியத்தில் எழுதலாம் வாங்க
5. ஒப்பாய்வு இலக்கியம் எழுதலாம் வாங்க
6. நான் ஏன் எழுதுகிறேன்

## கம்பனும் வேதாத்திரியமும்

1. கம்பனும் வேதாத்திரியமும் (இலக்கிய திறனும் கருத்தியலும்)
2. கம்பனும் வேதாத்திரியமும் (நாடும் அரசும்)
3. கம்பனும் வேதாத்திரியமும் (இறை சிந்தனைகள்)
4. கம்பனும் வேதாத்திரியமும் (மானுடம் வென்றதம்மா)

## உலகப் புகழ்பெற்ற தத்துவஞானிகளும் வேதாத்திரி மகரிஷியும் (ஒப்பாய்வு இலக்கியம்)

1. லியோ டால்ஸ்டாயும் வேதாத்திரி மகரிஷியும்
2. ஹிப்பாக்ரட்ஸ்ஸீம் வேதாத்திரி மகரிஷியும்
3. ஹென்றிவேர்ட்ஸ்வொர்த் லாஜ்பெலோவும் வேதாத்திரி மகரிஷியும்
4. பெர்ட்ராண்ட் ரசல்லும் வேதாத்திரி மகரிஷியும்
5. கலில் ஜிப்ரானும் வேதாத்திரி மகரிஷியும்
6. கன்பூசியனிசமும் வேதாத்திரி மகரிஷியும்
7. தஸ்தயேவ்ஸ்கியும் வேதாத்திரி மகரிஷியும்
8. ஜலாலுதீன் ரூமியும் வேதாத்திரி மகரிஷியும்
9. லாவோசும் வேதாத்திரி மகரிஷியும்
10. ஷேக்ஸ்பியரும் வேதாத்திரி மகரிஷியும்
11. சாக்கரட்டிஸ்ஸீம் வேதாத்திரி மகரிஷியும்
12. அரிஸ்டாடிலும் வேதாத்திரி மகரிஷியும்
13. பிளேட்டோவும் வேதாத்திரி மகரிஷியும்
14. செனகாவும் வேதாத்திரி மகரிஷியும்
15. மிர்தாவின் புத்தகமும் வேதாத்திரியமும்
16. நீட்சேயும் வேதாத்திரி மகரிஷியும்
17. சர் ஐசக் நியூட்டனும் வேதாத்திரி மகரிஷியும்
18. வால்டேரும் வேதாத்திரி மகரிஷியும்
19. ரால்ப் வால்டோரா எமர்சனும் வேதாத்திரி மகரிஷியும்
20. சார்லஸ் டார்வினும் வேதாத்திரி மகரஷியும்.
21. காரல் மார்க்ஸ்ஸீம் வேதாத்திரி மகரிஷியும்
22. இராபர்ட் கிரீன் இங்கர்சாலும் வேதாத்திரியும்.
23. சிகமண்ட் பிராய்டும் வேதாத்திரி மகரிஷியும்.
24. ஜேம்ஸ்ஆலனும் வேதாத்திரி மகரிஷியும்.
25. ஐன்ஸ்டைனும் வேதாத்திரி மகரிஷியும்
26. கன்பூசியஸ்ஸீம் வேதாத்திரி மகரிஷியும்
27. பெஞ்சமின் பிராங்களினும் வேதாத்திரி மகரிஷியும்
28. ரூஸ்வெல்டும் வேதாத்திரி மகரிஷியும்
29. வேட்ஸ்வொர்த்தும் வேதாத்திரி மகரிஷியும்
30. மில்டனும் வேதாத்திரி மகரிஷியும்

**Youtube channel Name – Vethathiriam Banukumar**
**Face Book Group வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்**